# சமாதானம் பண்ணுங்கள்

**2011**
**அக்டோபர்**
**1**
**சனி**

காலை
மத். 5 : 1–12

தி. வ.
மத். 5 : 9
**“சமாதானம் பண்ணுகிற வர்கள் பாக்கிய வான்கள்”**

மாலை
சங். 120:1–7

சிந்தனை
**உறவுகள் உடைகையில் உறவுப் பாலமாய் அமைதியை உருவாக்குவோம்.**



நம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலையை உற்று நோக்கினால் எங்கும் அமைதியற்ற ஒரு சூழலை தான் பார்க்க முடிகிறது. மனிதன் அமைதியாக சமாதானத்தோடு வாழவேண்டிய பூமியிலே மதத்தின் பெயரால் அல்லது அரசிய—ன் பெயரால் ஆதாயம் தேடும் கூட்டம் அமைதியற்ற நிலையை உருவாக்குகிறது. எல்லாவற்றிற்கு மேலாய் சுய லாபத்திற்காக இன்று திருச்சபையிலும் அமைதியற்ற சூழலை பார்க்கமுடியிறது. ஏசாயா தீர்க்கன் சூழுரைத்தவண்ணம் சமாதானத்தின் வழியை எங்கும் பார்க்க முடியவில்லை. ஆனால் இயேசு மலை அருட்பொழிவிலே சமாதானம் பண்ணுகிற வர்கள்தான் “தேவனுடைய குழந்தைகள்” என்ற அந்தஸ்தை பெற முடியும் என்று விளக்கம் அளிக்கிறார்.

எபிரேய பதத்தில் தேவனுடைய பிள்ளைகள் என்றால் பரலோக கடவுளின் குணாதிசயங்களை வெளிப்படுத்தும் இறைமக்கள் ஆகும். இயேசு சமாதானம் பண்ணுவதையே தம்மைப் பின்பற்றுகிறவர்களிடம் அதிகம் விரும்புவதாக வெளிப்படுத்துகிறார். இப்பாக்கிய வசனங்களைத் தம் சீடர்களிடம் பகிர்ந்துக்கொள்ளும்போது அவர்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாக மாற முழு தகுதிபெற பயிற்றுவிக்கிறார். அதற்கு முன் கூறிய பாக்கிய வசனங்களைச் சமாதானம் பண்ணுகிற வசனத்தோடு இணைக்கிறார். சாதாரணமாக ஒருவனால் சமாதானம் பண்ணமுடியாது. அதற்கு. அன்பு, ஞானம், பொறுமை, மன்னிக்கும் மனபான்மை எல்லாவற்றிற்கும் மேலாக மனிதநேயம் இருந்தால் மாத்திரமே ஒருவனால் சமாதானம் பண்ணுகிறவனாக அல்லது உருவாக்குகிறவனாக மாற முடியும் என்று சொல்லுகிறார்.

வளர்ந்து வரும் உலகச் சூழ—ல் நம்மிடம் அன்பாயிருக்கிறவர்களை காட்டிலும் நம்மிடம் பகைமையை காட்டும் மனித சமுதாயத்தையே பார்க்க முடிகிறது. குடும்பத்தில், படிக்கிற இடத்தில், பணிபுரியகூடிய இடத்தில் எங்கும் போட்டி, பொறாமை, எரிச்சல், வெறுப்பு இவைகளையே கண்கூடாக காண முடிகிறது. நாம் எச்சூழ—லும் அமைதியின் கருவிகளாய் செயல்பட இறைவனிடம் நம்மைத் தருவோம்.

# அச்சத்தை அகற்றும் சமாதானம்

**2011**
**அக்டோபர்**
**2**
**ஞாயிறு**

காலை
லூக். 1:26–45

தி. வ.
லூக். 24 : 36
**"இயேசு தாமே அவர்கள் நடுவிலே நின்று உங்களுக்குச் சமாதானம் என்றார்."**

மாலை
ரோ. 8:1–11

சிந்தனை
**அச்சம் அகற்றுவது அமைதிக்கு அடிப்படை**

இன்று மனிதனை அதிகம் வாட்டியெடுக்கும் கொடிய நோய் பயம். பயத்திற்கான காரணம் பல நேரங்களில் தடுமாற்றம், சந்தேகம், ஏமாற்றம், தோல்வி போன்ற காரணங்களால் ஏற்படலாம். இயேசுவின் சீடர்களுக்கும் பல நேரங்களில் பயம் தொற்றிக்கொண்டதைக் காணமுடியும். இயேசுவின் சிலுவை மரணத்திற்குப் பின் சீடர்களுள் உருவான பயம் பெரும் சேதத்தை உருவாக்கியது. யூதாஸ் பயந்து போய் தன் விலையேறபெற்ற வாழ்வை முடித்துக்கொண்டான். பேதுரு நிம்மதி இழந்து மனம் கசந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிற நிலை. இந்நிலையில் உயிர்தெழுந்த மனுஷகுமாரன் மலையிலே கூடியிருந்த தம் பத்து சீடர்களுக்கு காட்சியளித்து அவர்கள் நடுவில் உங்களுக்கு சமாதானம் என்கிறார். இயேசு கூறின சமாதானம் சாதாரணமானது அல்ல. மாறாக கலங்கிபோய், நம்பிக்கை இழந்து காணப்பட்ட தம் அடியவர்களுக்கு புது நம்பிக்கையை கொடுத்தது.

நன்மை செய்த இயேசுவுக்கு அற்புதங்கள் பல செய்த இயேசுவுக்கு, மரித்தவர்களை உயிரோடு எழுப்பிய இயேசுவுக்கே சிலுவை, மரண தண்டனை அப்படியென்றால் அவரோடு சுற்றி திரிந்த, அவரை பின்பற்றிய நமக்கு என்ன நடக்குமோ என்ற கலக்கம், அச்சம் சீடர்களை கவ்விக் கொண்டிருந்தது. நீதியை நிலைநாட்ட, அமைதியை நிலைநிறுத்த விரும்பினவருக்கு இந்நிலை என்றால் எங்களுக்கு என்ன நடக்குமோ என்ற கலக்கம் காணப்பட்டு இருக்கலாம். இந்நிலையில் இயேசுவின் திருக்காட்சி குழப்பிபோய் அமைதியை இழந்து அச்சத்தோடு காணப்பட்ட சீடர்களுக்கு சமாதானம் கொடுத்தது. இயேசு கூறின சமாதானம் அரசின் மேலும் அதிகாரிகள் மேலும் மரணத்தின் மேலும் சீடர்களுக்குக் காணப்பட்ட பயத்தை மாற்றியது. துவண்டு போய் ஒளிந்து இருந்தவர்களுக்கு தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியைச் செய்ய புதிய வேகத்தை கொடுத்தது. நாமும் பல நேரங்களில் நீதியை நிலைநாட்ட மனித நேயத்தை, அன்பை நிலைநிறுத்த முயற்சி செய்யும் போது வருகிற எதிர்ப்புகளை நினைத்து கலங்கிபோய் காணப்படுகிறோமா. சமாதானத்தின் கடவுளோடு ஒப்புரவாகி சமாதானத்தை சுதந்தரிப்போம்.

# இறையடியவரை ஏற்பதால் சமாதானம்

**2011**
**அக்டோபர்**
**3**
**திங்கள்**

காலை
லூக். 10:1–11

தி. வ.
லூக். 10 : 5
**"...இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாக வென்று முதலாவது சொல்லுங்கள்"**

மாலை
ஆதி. 18:1–15

சிந்தனை
**இறையடியவர்கள் நம்முடையவர்கள். இணைந்து இறைபணி செய்வோம்.**

இயேசு தாம் வாழ்ந்த காலத்திலே நற்செய்தியை உலகமெங்கும் சுமந்து செல்ல சீடர்களை மாத்திரமல்லாது, மற்றும் அநேகரை தெரிந்தெடுத்தார். இயேசு 70 பேரை தெரிந்தெடுத்து அவர்களுக்கு கூறின ஒரு வேண்டுகோள் ஒரு வீட்டுக்குள் பிரவேசித்தால் அங்கே சமாதானம் உண்டாக வாழ்த்து சொல்லும்படியாக அறிவுறுத்துகிறார். இயேசு சீடர்களுக்கு கூறின அறிவுரையைவிட அதிலே இயேசு மறைமுகமாக உலக ஜனங்களுக்கு கூறின ஒரு உண்மை மறைந்துஉள்ளதை பார்க்கலாம். ஒன்று நம் இல்லத்தில் இறை பணியாளர்களை மனப்பூர்வமாக ஏற்கும்போது அவர்கள் வாயிலாக கடவுள் கூறிய சமாதானம் நம் இல்லத்திற்குள் குடிபுகுவதற்கு வாய்ப்பு உள்ளது. இரண்டாவதாக சமாதான வாழ்த்து நமக்கு கூறப்பட்டாலும் அந்த சமாதானத்தை பெறுவதற்கு உரிய தகுதி நம்மிடத்தில் இருந்தால் மாத்திரமே அந்த சமாதானம் நமக்கு உரியதாய் காணப்படும். இன்று இறைபணியாளர் களை சிலர் ஏற்றுக்கொள்கின்றனர். சிலர் புறக்கணிக்கின்றனர். ஏற்றுக் கொள்கின்றவர்களிலும் இரண்டு விதமான மனிதர்களை பார்க்கலாம். ஒன்று உண்மையாக கடவுளுக்கு பயந்து ஏற்றுக்கொள்ளுதல். இன்னொன்று தங்கள் சுயநலத்திற்காக ஏற்றுக் கொள்ளுதல். இறையடியவர்களை நம் இல்லத்திலும் ஏற்பதில்லை. கடவுளின் திருச்சபையிலும் ஏற்பதில்லை. கடவுள் கூறின சமாதானம் நம்மிடையே, நம் குடும்பத்திற்குள், நம் திருச்சபைக்குள் உள்ளது. அப்படியில்லையெனில் ஒருவேளை நாம் நம்மிடையே கடவுளின் அருட்பணியை செய்யவரும் இறையடியவர்களை புறக்கணிப்பது ஒரு காரணமாய் அமையலாம். ஒருவேளை பணம், அந்தஸ்து, நமக்கு அதிகம் இருக்கலாம். கடவுளின் சமாதானம் நம்மிடையே, நம் குடும்பத்தில் உள்ளனவா. நம் வீட்டுக்குள் சமாதானம் நிலைக்கொள்வதற்கு உண்மையான தகுதியுள்ள வாழ்வு இறையடியவரை ஏற்பதற்கு இருக்குமானால் அவர்கள் கடவுளால் கொடு என்று சொல்லப்பட்ட சமாதான வாழ்த்து சொல்லும்போது அச்சமாதானம் நம்மிடையே தங்கியிருக்கும்.

**2011**
**அக்டோபர்**
**4**
**செவ்வாய்**

காலை
எபே. 4:25–32

தி. வ.
எபே. 4 : 32
**"...கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ... மன்னியுங்கள்"**

மாலை
ஆதி. 45:1–15

சிந்தனை
**மன்னிப்பை மாண்புடன் கொடுத்து ஒப்புரவை வளர்ப்போம்.**

# மன்னிப்பின் வழி ஒப்புரவு

ஒரு மனிதன் தான் தினமும் பயன்படுத்தும் வார்த்தைகளில் அதிகம் பயன்படுத்தும் வார்த்தை 'I am sorry' (என்னை மன்னிச்சிடுங்க, தெரியாம நடந்துவிட்டது) ஆனால் அந்த வார்த்தையை மறுபடியும் மறுபடியும் பயன்படுத்துகிறோமே தவிர, செய்த தவறில் இருந்து மாறியுள்ளோமா? அல்லது மறுபடியும் அதை தான் செய்கிறோமா என்பது ஒரு பெரிய கேள்வி. ஆனால் மன்னிப்பு என்று சொல்லுகிற அந்த உயரிய பதம் ஒப்புரவுக்கு நேராக நம்மை வழிநடத்துகிறது. நல்ல ஒரு உதாரணம் யோசேப்பு. யோசேப்பு தன் சகோதரர்களால் கொடுமைப்படுத்தப்பட்டு, அடிமையாக விற்கப்பட்டான். பல கடினங்களுக்கு மத்தியிலும் பெரிய அதிகாரியாக வந்தபோது பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டு வந்த சகோதரர்களிடம் தன் வெறுப்பை காட்டாதபடி, பல ஆண்டுகள் தன் பெற்றோரிடம் இருந்து தன்னை பிரித்தவர்களைப் பழிவாங்காதபடி அவர்களை மன்னித்து உதவுகிறான். ஆகவே பிரிந்த உறவுகள் சரிசெய்யப்படுகிறது. பெற்றோருடனும், சகோதரர்களுடனும் ஒப்புரவாகக் கூடிய சூழல் உருவாகிறது. ஆகவே எகிப்திலே எகிப்தியர்களைக் காட்டிலும் இஸ்ரயேலர் அதிகமாய் பெருகும்படியான வாய்ப்பு உருவானது. அந்த இஸ்ரயேல் குலத்திலே மனுகுமாரன் பிறக்க வாய்ப்பு உருவானது. இவைகள் அனைத்திற்கு யோசேப்பின் மன்னிக்கும் தன்மை ஒப்புரவுக்கு நேராய் வழிநடத்தியதே காரணம்.

பல நேரங்களில் இதே தருணம் நமக்கு ஏற்படுகிறது. எப்படி என் சகோதரன் எனக்கு செய்தத் தீங்கை நான் மன்னிப்பது? இந்த கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்தால் பிரிந்த உறவுகள் சரிசெய்யப்படும், மங்கிப்போன உறவுகள் புதுப்பிக்கப்படும்.

இன்று திருச்சபைகள் சீர்குலைந்து போய் மனித உறவுகளில் விரிசல்கள் அதிகரித்துக் கொண்டே போகிறதற்கான காரணம் மன்னிப்பு உள்ளத்தில் இருந்து வெளிப்படாமல் போனதே. மத்தேயு 6 : 14, 15; மாற்கு 11 :25 இயேசு கற்றுத்தந்தவைகளை திருப்பிப்பார்க்க வேண்டும். இயேசுவின் எச்சரிப்பை மறக்க கூடாது. நாம் மற்றவர்களை மன்னிக்காவிட்டால் நம்மை கடவுள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்.

# மனம் திரும்புவதால் ஒப்புரவு

**2011**
**அக்டோபர்**
**5**
**புதன்**

காலை
லூக். 19:1–10

தி. வ.
லூக். 19 : 9
**"இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே"**

மாலை
சங். 18:25–50

சிந்தனை
**மனம் திரும்புதல் இறையரசில் மகிழ்வை ஏற்படுத்தும்.**

மன்னா சேர்ப்போம்

மனந்திரும்புதல் இறைவனோடும் மனிதரோடும் ஒப்புரவை உருவாக்குகிறது. மனந்திரும்பும் வாழ்வை இறைவன் விரும்புகின்றார். இயேசுகிறிஸ்து எரிகோவிற்குச் சென்று அதன் வழியாக நடந்து சென்றுக் கொண்டிருந்தார். சகேயு என்பவர் வரி பிரிப்பவரும் அவர்களுக்கு தலைவராகவும் இருந்தவர். யூத மக்களிடமிருந்து வரி வசூ—த்து ரோமர்களுக்கு செலுத்தி வந்தவர். வரி என்ற பெயரில் மக்களிடமிருந்து அளவுக்கு அதிகமான பணம் வசூ—த்து வந்தார். இயேசுகிறிஸ்துவைப் பார்க்க வேண்டும் என்கின்ற ஆவ—னால் தான் குள்ளமாக இருந்த காரணத்தினால் காட்டு அத்தி மரத்தின் மேல் ஏறி ஒளிந்திருந்தார். இயேசுகிறிஸ்துவின் சகேயுவே இறங்கி வா என்ற கட்டளையினால் கீழ்ப்படிந்து கீழே இறங்குகின்றார். மனப்பூர்வமாக இயேசுகிறிஸ்துவை தன் இல்லத்திற்கு அழைத்துச் செல்கின்றார். வழியில் தன்னுடைய தவறுகளை உணர்ந்து மனந்திரும்ப முற்படுகிறார். தான் அநியாயமாக வாங்கியவைகளை நான்கு மடங்குகளாகத் திருப்பிக் கொடுப்பதாக வாக்குக் கொடுக்கின்றார். இறை மீட்பைப் பெற்றுக் கொள்ளுகின்றார்.

இறை சமூகத்தில் மனந்திரும்பி இறைவனுடன் ஒப்புரவாக வேண்டுமென்றால் சகேயுவைப் போல இறை வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும் (வச. 5, 6) தவறை உணர்தல் வேண்டும் (வச. 8). அத்துடன் முழுமனதுடன் இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும் (வச. 8) மனந்திரும்ப இத்தகைய தகவுகள் நிச்சயம் தேவை. இறைவனும் இதையே விரும்புகின்றார். மனிதரிடம் இதையே எதிர்பார்க்கின்றார்.

நம் வாழ்வில் எப்படி வாழ்கிறோம் என்பதை இக்காலைப் பொழுதில் ஆராய்ந்து பார்த்து நம் வாழ்வில் குறைகள் இருக்குமானால் இறைவனுக்குக் கீழ்ப்படிய, தவறுகளை உணர, இறைவனுக்கு முழுமையாய் நம்மை அர்ப்பணிக்க மறந்திருந்தோமென்றால் இன்றே இறை சமூகத்தில் மன்னிப்புக்கேட்டு மனந்திரும்பி இறைவனுடன் ஒப்புரவாக முற்படுவோம்.

# பிழை உணர்தலால் ஒப்புரவு

**2011**
**அக்டோபர்**
**6**
**வியாழன்**
**தூய தோமா திருநாள்**

காலை
சங். 51:1–13

தி. வ.
சங். 51 : 10
**“தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்”**

மாலை
மத். 12:36–41

சிந்தனை
**பிழை உணர்தல் புது உறவைத் தரும்.**



தவறு செய்வது மனித இயல்பு. அதை உணர்வது சிறந்த பண்பு ஆனால் தான் செய்தது தவறு என்பது சுட்டிக்காட்டப்படும் போது அதை உணர்வது அதிலும் சிறந்த மனிதப் பண்பு. பிழை உணர்தல் இறைவனுடன் ஒப்புரவாக்குகிறது அத்துடன் இறை அடியவர்களுடனும், சக மனிதர்களுடனும் ஒப்புரவாக்குகின்றது.

தாவீது அரசர் இறை விருப்பிற்கு உட்பட்டு வாழ்ந்து வந்தார். 1சாமுவேல் 11, 12 ஆகிய அதிகாரங்களில் படிக்கும்போது இறைவனுக்கு விரோதமாகத் தவறு செய்கின்றார். அதாவது பத்சேபாள் என்பவள் மீது ஆசைக்கொண்டு அவர் கணவர் உரியாவைக் கொன்று பத்சேபாளைத் தனது மனைவியாக்கி கொள்கின்றார். இறைவன் இறைவாக்கினர் நாத்தானை தாவீதினிடத்தில் அனுப்புகின்றார். தாவீதிடம் வந்த இறைவாக்கினர் நாத்தான் தாவீதின் தவறினைச் சுட்டிக் காட்டுகிறார். தான் செய்தது இறைவன் விரும்பாதத் தீச்செயல் என்பதை உணர்ந்த தாவீது அப்படியே தன்னுடைய பிழையை உணர்ந்து அறிக்கைச் செய்து சங்கீதம் 51—ஐப் பாடுகின்றார். “நான் கர்த்தருக்கு விரோதமாக பாவஞ் செய்தேன்” (2சாமு. 12 : 13) என்கிறார். உடனே இறைவனுடன் ஒப்புரவு ஏற்படுகிறது. “நீ சாகாதபடிக்கு கர்த்தர் உன் பாவம் நீங்கச் செய்தார்” என்று நாத்தான் இறைவாக்கினர் சொல்லுகிறார். தாவீதின் இருதயமானது கறைபடிந்ததாக இருந்தது. கடினப்பட்டதாக இருந்தது எனவே கழுவப்பட்ட சுத்த இருதயத்தைத் தாரும் (சங். 51 : 10) என்று வேண்டுகின்றார்.

கடவுள் பிழைகளை பொறுக்கிறவரும், அதைச் செய்வோரை ஏற்றுக்கொள்கிறவரும், அவன் மீது அன்பு செலுத்தி அவனை நல்வழிபடுத்துகிறவருமாயிருக்கிறார். ஆகவே நாமும் தாவீதைப் போல் தவறு செய்து நமது இருதயமும் கறைபடிந்து கடினப்பட்டு, இறை சமூகத்தை விட்டு தூரம் சென்றிருந்தோமென்றால் கழுவப்பட்ட சுத்த இருதயத்தை தருகின்ற இறைவனிடம் பிழை உணர்ந்து மன்னிப்பு கேட்டு ஒப்புரவாக முற்படுவோம்.

# பகை களைதலால் ஒப்புரவு

**2011**

**அக்டோபர்**

**7**

**வெள்ளி**

காலை

எபே. 2:11–18

தி. வ.
எபே. 2 : 16

**“பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்”**

மாலை

நீதி. 16:1–14

சிந்தனை

**பகைமையை களைதல் மேன்மையைத் தரும்.**

பகை ஒரு களை. களையாகிய பகை வளர்வதால் மனிதம் கெட்டுவிடுகிறது. பகை நண்பர்களை இழக்கச் செய்கிறது. பகை பெற்றோரை, சகோதரர்களை உறவினர்களை மறக்கச் செய்கிறது பகையை களைந்தால் ஒப்புரவை உருவாக்கலாம்.

பகையைக் களைந்து ஒருவருக்கொருவர் ஒப்புரவு ஏற்படுத்த வேண்டும். பாவத்தின் ஆதிக்கத்திற்குட்டபட்ட மானுடர் இறைவனை விட்டு தூரம் சென்றச் சூழ—ல் வாழ்ந்து வந்த நிலையை மாற்ற இறைவன் தன் ஒரே மகன் இயேசுகிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பினார். மக்களைப் பாவ படுகுழிக்குள்ளிருந்து மீட்டெடுக்கும் படியாக அவர் சிலுவையை ஏற்றார். இறைவனோடு பாவ மனிதர்களை ஒப்புரவாக்கி ஒன்றிணைத்தார். பகையைக் களைந்து இறைவனோடு ஒப்புரவு வாழ்வு வாழச் செய்தார். தம்முடைய சிலுவை மரணத்தின் வாயிலாக பகையைக் கொன்றொழித்தார். இரு திறத்தாரையும் ஒப்புரவாக்கினார்.

இறை அடியார்களாகிய நாம் நம் வாழ்வினில் பகையை களைந்து பிறர் மீது கரிசனை காட்டி ஒப்புரவுடன் வாழ முயல்வது அவசியம். குடும்பத்தில் நண்பர்களிடையில், திருச்சபையில், சமுதாயத்தில் பகைமை உணர்வை ஏற்படுத்தாமல் பகையாகிய களையைப் பிடுங்கி எறிந்து விட வேண்டும். அதன் வாயிலாக அனைத்து தரப்பு மக்களையும் இறைவனுடன் ஒப்புரவாக்குகின்ற நல்ல திருப்பணியினை செய்தல் அவசியம்.

பகை மறந்து ஒப்புரவாகுவதினால் புது வாழ்வு பிறக்கிறது. (பிலமோன்). கிறிஸ்து தனது சிலுவை மரணத்தின் மூலம் ஒப்புரவாக்கும் பணியைச் செய்தார். அது போல கண்ட சகோதரனிடம் அன்புக் கூராதவன் காணாத இறைவனிடத்தில் எப்படி அன்புக்கூருவான் என்ற அப்போஸ்தலன் யோவான் கூற்றின்படி நம்மில் காணப்படும் பிறரைக் குறித்த பொறாமை, வஞ்சகம், கோபம், புறம்கூறுதல் போன்ற பகைமையை ஏற்படுத்தும் பண்புகளை விலக்கி ஒப்புரவாக அர்ப்பணிப்போம்.

# கிறிஸ்துவோடு ஒப்புரவு

2011
அக்டோபர்
8
சனி

காலை
2கொரி. 5:11–21

தி. வ.
2கொரி. 5:18

**“. . . இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்”**

மாலை
நீதி. 16:15–24

சிந்தனை
**கிறிஸ்துவோடு ஒப்புரவு பிரதீசைப் பெற்றுத்தரும்.**

மன்னா சேர்ப்போம்

ஒப்புரவு என்பது மிக முக்கியமானது மனிதரிடையே இறைவனிடையே ஒப்புரவு தேவை.

மனிதர் இறைவிருப்பிற்கு மாறாக தவறு செய்ததால் உலகில் பாவம் தோன்றியது. இதனால் இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையே உள்ள உறவு பாதிக்கப்பட்டது. உறவில் விரிசல் ஏற்பட்டது. மனிதர் இறைச் சாயலை இழந்தனர். இறை ஒளியை இழந்து பாவ வாழ்க்கைக்கு அடிமையாகி மீண்டும் மீண்டும் வாழ்வைச் சீரழிக்கும் அவல நிலைக்கு தள்ளப்பட்டனர். தான் செய்வது தவறு என்பதை அறிந்தும் அறியாதச் சூழல் காணப்பட்டது.

இப்படிப்பட்டச் சூழலில் வாழ்ந்த மனிதரை தம்மோடு ஒப்புரவாக்கும் பணியினைச் செய்ய கடவுள் தம்முடைய ஒரே மகனை இவ்வுலகில் அனுப்பினார். இறைவன் கோபம் நிறைந்தவர் அல்ல அன்பு நிறைந்தவர். எனவே தான் பாவம் நிறைந்த மனிதனுக்கும் இறைவனுக்கும் நடுவில் இணைப்பு பாலமாக நின்று இயேசுகிறிஸ்து ஒப்புரவாக்குகின்றார். (எபே. 2 : 13—15, ரோமர் 5 : 1). இறைவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு ஒப்புரவாக்கியுள்ளார். அந்தப் பணியினை தொடர்ந்து செய்ய மனிதராகிய நம்மிடம் பணித்துள்ளார். (2கொரி. 5 : 18)

ஒப்புரவுக்குத் தடையாய் இருந்த பகைமையை இயேசு சிலுவையில் கொன்று விட்டார். இறைவனின் பிள்ளைகள் என்று சொல்வதில் பெருமிதம் கொள்ளுகின்ற நாம் நம்முடைய குற்றங்களைக் களைந்து கிறிஸ்து ஒப்புரவாக்குகின்ற பணியினை தொடர்ந்து நாம் செய்ய இறைவனால் அழைக்கப்படுகின்றோம்.

நம்மோடு வாழ்கின்ற சகமனிதரிடையே காணப்படுகின்ற இறை உறவைப் பாதிக்கின்ற காரணிகளைக் கண்டறிந்து கிறிஸ்துவோடு அவர்கள் ஒப்புரவு வாழ்வு வாழ ஒப்புரவு பணியைச் செய்து கிறிஸ்துவோடு நாமும் ஒப்புரவாகி பிறரையும் ஒப்புரவாக்கும் பணியினைச் செய்து இறையாசி பெற முற்படுவோம்.

2011
அக்டோபர்
9
ஞாயிறு
**NMS & மாற்றுத் திறனுடையோர் ஞாயிறு**

காலை
1தெச. 5:12–28

தி. வ.
1தெச. 5 : 14
**"...திடனற்றவர்களைத் தேற்றுங்கள் பலவீனரைத் தாங்குங்கள்..."**

மாலை
2சாமு. 9:1–13

சிந்தனை
**கரிசனை கொள்ளும் உள்ளங்களே உயர்ந்து நிற்கும் உள்ளங்கள்.**



# கரிசனை

மனத்தளர்ச்சியுள்ளவர்களுக்கு ஊக்கமூட்டுங்கள் வலுவுற்றோருக்கு உதவுங்கள். எல்லோரோடும் பொறுமையாயிருங்கள்.

தூய பவுலடியார் கொரிந்து திருச்சபையில் திருப்பணி செய்து கொண்டிருந்த நாட்களில், தான் அன்பு கூர்ந்த தெசலோனிக்கேய மக்களுக்காக இத்திருமுகத்தை எழுதுகின்றார். திருப்பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த பவுலடியார் பிறர் மீது திருச்சபை சார்ந்த மக்கள் கரிசனையுடன் வாழ வேண்டும் என்பதை பொது அறிவுரையாக தெளிவாக கோடிட்டு காட்டுகின்றார்.

இன்றைய சமூகம் — பிறர் மீது குறிப்பாக வாழ்விழந்து நிற்கின்ற மக்கள் மீது கொண்டுள்ள கரிசனை என்ன? கிறிஸ்துவின் நற்செய்தி, கிறிஸ்துவின் திருப்பணிகள் பிறர் மீது கரிசனை கொள்கின்றதாக அமைகின்றது. மேலும் இயேசு தன் இறைப்பணி காலத்தில் சமுதாயத்தில் இடைநிலையில் தள்ளப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மக்களான தொழுநோயாளிகள், பார்வையற்றோர், உடல் முழுநலம் குன்றியோர் மீது இயேசு கரிசனை கொள்கிறார். அவர்கள் விரும்பிய முழுநலத்தைக் கொடுத்தார். அப்படிப்பட்ட ஓர் கரிசனை வாழ்வு நம் மீது இருக்க வேண்டும் என்பது இறைவனின் விருப்பம். மனம் தளர்ந்து வாழ்கையில் சோர்வுற்று வாழ்வு என்னவாகுமோ என்று இருக்கும் மக்களை நாம் காண்கின்றோம். இவர்களுக்கு நாம் செய்கின்ற கைமாறு என்ன? கிறிஸ்துவின் அடியவர்களாகிய நாம் பிறர் மீது கரிசனை கொள்ளுகின்றபோது நம்மூலம் அவர்கள் துன்பங்கள் போக்கப்படுகின்றது. அவர்களும் வாழ்வு பெறுகின்ற அனுபவங்களை நாம் காண முடியும்.

பிறர் மீது கரிசனை கொண்ட அன்னை தெரசாவின் சமூகப்பணி, வாழ்வு இழந்து நின்ற மக்களுக்கு ஒளி தருகின்றப் பணியாக அமைந்தது. தன்னை நாடிவந்த மக்கள் மீது கிறிஸ்துவின் அன்பினால் ஏற்பட்டக் கரிசனை பல மக்களுக்கு வாழ்வு தந்த பணியாக அமைந்தது. இன்று அவர் பிள்ளைகளாய் வாழ்கின்ற நாமும் பிறர் மீது கரிசனையுடன் வாழ்ந்து இறையாட்சி மலர துணை நிற்போம்.

2011
அக்டோபர்
10
திங்கள்

காலை
மத். 8:1–4

தி. வ.
மத். 8 : 3
**“இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு; எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்”**

மாலை
நீதி. 22:1–9

சிந்தனை
**உன்னை மற்றவர்களுக்கு முன் மறைக்காமல் உன்னை தேடி வருபவரிடம் சரணடை**



# இறைவிருப்பால் சுகம் பெறுதல்

மனிதன் இறைவனால் படைக்கப்பட்டவன். மனிதன் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்பது இறைவனின் விருப்பம். மனிதன் பலவிதமான நோய்களுக்கு அடிமையாகின்றான். இறைபயம் அற்றவனாய் மனிதன் வாழ்வதும், இறைவனின் திட்டத்தி—ருந்து விலகிச் செல்லும் வாழ்க்கையும் பல துன்பங்களுக்கு வழி வகுக்கின்றது. இப்படியே துன்புறும் மனிதனின் துயர் துடைத்த ஆண்டவர் நோயுற்றோருக்கும் விடுதலை வழங்கி அவர்களை மகிழ்வடையச் செய்தார்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற கூற்று நம்மை சிந்திக்க வைக்கின்றது.

யூத சமூகத்தில் மிகவும் கொடூரமாக கருதப்பட்ட நோய் தொழுநோய். தொழுநோயாளியாக இருக்கும் மனிதன் சமூகத்தில் வெளியே வரமுடியாது, புறம்பே தள்ளப்பட்டவனாய் இருக்கின்றான். தன்னெதிரே வருகின்ற மனிதனை சந்திக்கும் நேரம் தீட்டு, தீட்டு என்று அபாய குரல் எழுப்பி மக்களை எச்சரிக்கின்ற நிலைக்கு அவன் தள்ளப்படுகின்றான். பெருந்திரள் மக்கள் கூட்டத்தில் கிறிஸ்துவின் பயணம் தொடரும் வேளையில் இந்நோயுற்ற மனிதன் கிறிஸ்துவை சந்திக்கும் வாய்ப்பை பெறுகின்றான். தான் சந்தித்தவர் இறைவன் என்பதை உணர்ந்தவர் இறைவிருப்பத்திற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கின்றார்.

அவனுடைய விசுவாசம் அவனை கிறிஸ்துவண்டை வழிநடத்துகின்றது. அவனுடைய எதிர்ப்பார்ப்பு அவனுக்கு ஆரோக்கியத்தைத் தந்தது. நம்பிக்கையுடன் இயேசுவிடம் வந்த அவன் — ஐயா நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும் என்கின்றார். கிறிஸ்து வாழ்வு தருகின்றவர் என்பதை அறிந்து இருந்தார். ஆகவே தான் மறைந்து இருக்க மனமில்லாமல் இறைவனுடைய விருப்பத்துக்குத் தன்னை ஒப்படைத்து, வாழ்வில் சரீர சுகத்தையும் நன்மையையும் பெற்றுக் கொள்கின்றார்.

நமது வாழ்விலும் மாற்றம் முக்கியம் அவைகள் நமது வாழ்வில் நிறைவேற இறை விருப்பத்திற்கு நம்மை அர்ப்பணிப்போம்.

# செவிகள் திறந்தன

**2011**
**அக்டோபர்**
**11**
**செவ்வாய்**

காலை
மாற். 7:31–37

தி. வ.
மாற். 7 : 34
**“வானத்தை அண்ணார்ந்து பார்த்து, ... எப்பத்தா என்றார்; அதற்குத் திறக்கப்படுவாயாக என்று அர்த்தமாம்”**

மாலை
நீதி. 16:25–33

சிந்தனை
**அர்ப்பணமுள்ள வாழ்வு – உயிர்மூட்டம் உள்ள வாழ்வாய் அமையும்.**

மன்னா சேர்ப்போம்

உடல் ரீதியாக குறைபாடுள்ள மக்களை இன்று நாம் மாற்றுத்திறனாளிகளாக கருதுகின்றோம். தன்னுடைய சரீர வளர்ச்சியில் குறைகள் வருகின்ற வேளையில் அவன் சமுதாயத்தால் ஒதுக்கப்படுகின்றான், தனிமையாக்கப்படுகிறான். பெற்றோர் மற்றும் உடன் பிறப்புகளின் ஆதரவு சிலருடைய வாழ்வில் இல்லாமல் போகின்றது. வாழ்வை இழந்தவனாக சமுதாயத்தில் காணப்படுகின்றான். யூத சமூகத்திலும் இந்நிலையே நிலவி வந்தது.

ஆனால் கிறிஸ்துவின் நற்செய்தி இப்படிப்பட்ட மக்களுக்கு உயிரூட்டம் உள்ள செய்தியாக அமைகின்றது. அது மக்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அவருடைய நற்செய்தியும், நற்செயல்களும் அனைத்து மக்களும் சமம் என்ற உண்மையைப் பிரதிப—த்தது. அவருடைய அற்புதங்கள் வாழ்விழந்த மக்களுக்கும் வாழ்வும் ஒளியிழந்த மக்களுக்கு ஒளியும், முகவரி இழந்த மக்களுக்கு முகவரியும் கொடுத்தது.

தியான பகுதியில் காதுகள் கேட்காத மனிதன் கிறிஸ்துவிடம் கொண்டு வரப்படுகின்றார். கிறிஸ்துவிடம் நாம் வருகின்ற வேளை, கிறிஸ்து நம்மை சந்திக்கின்ற வேளை, நமக்கு நன்மைகள் தருகின்ற வேளையாக அமைகிறதை நாம் காணமுடியும். இந்த மனிதன் கடவுளிடம் கொண்டு வரப்படுகின்றார். இறைவன் வாயி—ருந்து வரும் வார்த்தைக்காக காத்திருக்கின்றார்.

குறைவுகளை விசுவாசத்துடன் கிறிஸ்துவண்டை நாம் கொண்டு செல்லும் போது அது நிறைவாக மாற்றப்படுகின்றது. இப்போது இவனுடைய குறை அங்கு இறைவனின் வார்த்தையால் நிறைவு பெறுகின்றது. வானத்தை அண்ணாந்து பார்த்து இறைவனை நோக்கி திறக்கப்படு என்றார். கிறிஸ்துவின் வார்த்தை அவன் காதுகளுக்குள் கடந்து சென்ற போது அவனுக்கு விடுதலை கிடைத்தது. நாம் விசுவாசத்துடன் இறைவனிடம் சேர நம்மை அர்ப்பணிப்போம்.

# கண்கள் திறக்கப்பட்டன

**2011**

**அக்டோபர்**

**12**

**புதன்**

காலை

யோவா. 9:1–15

தி. வ.

யோவா. 9 : 5

**“நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்”**

மாலை

நீதி. 17:15–28

சிந்தனை

**இன்று இறை வார்த்தைக்கு கீழ்ப்படிந்திருந்தால் என்றும் வாழ்வு உயர்வாய் அமையும்**

மன்னா சேர்ப்போம்

*மனிதன் குறைபாடுள்ளவனாக பிறக்கின்றபோது இவன் ஏன்? இப்படி பிறந்தார் என்கின்ற கேள்வி எல்லாரிடமும் எழும்பக்கூடிய ஒன்று. இவருடைய மூதாதையர் பாவம் செய்திருக்கலாம், அல்லது இவனது பெற்றோர் கொடிய பாவங்களைச் செய்திருக்கலாம், எனவே தான் இவர் இப்படி பிறந்திருக்கிறார் என்கிற பேச்சுகளும் கேள்விகளும் எழுவது இயல்பான ஒன்றாகும்.*

*கிறிஸ்துவின் திருப்பணிக் காலங்களில் சீடர்கள், இயேசுவிடம் வந்த பார்வையற்ற மனிதரைப் பார்த்தபோது கேட்கின்ற கேள்வி. இவன் பார்வையற்றவனாகப் பிறந்திருப்பது யார் செய்த பாவம். பாவத்தினால் ஒரு மனிதன் குருடனாக்கப்படுவது இல்லை என்பதை இறைவன் உணர்ந்திருந்தார், அறிந்திருந்தார். கேள்வி கேட்பவர்களாகிய நாம் நமது வாழ்வில் கண்கள் இருந்தும் குருட்டுத் தன்மையுடன் தான் வாழ்கின்றோம். சங். 119 : 18—இல் வேதத்தின் அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும் என்று தாவீது கூறுகின்றார். நமது சரீர கண்களைத் திறந்திருந்தாலும் ஆத்மீகமான கண்கள் அடைக்கப்பட்டவர்களாக தான் வாழுகின்றோம்.*

*அன்றைய யூதர்கள், சமயத்தலைவர்கள், சதுசேயர் போன்றோரை இயேசு குருடருக்கு வழிகாட்டிகளே என்றார். காரணம் பாரம்பரியங்களையும், சடங்காச்சாரங்களையும் அதிகமாக பின் தொடர்ந்தார்களே தவிர அயலாரைக் குறித்த பரிவு அற்றவர்களாய் குறிகிய பார்வை கொண்டவர்களாயும், எதற்கும் கவலைப்படாமல் பார்வையற்ற மனிதரைப்போலவும் வாழ்ந்தனர்.*

*நமது வாழ்வில் மாற்றம் முக்கியம். நமது வாழ்வு மற்றவர்களுக்கு பார்வையும், ஒளியும் தருகின்ற வாழ்வாக அமைய இறைவன் விரும்புகின்றார். மக்கள் கூட்டம் இதை அறியும் விதமாய் இறைவன் அவன் கண்களின் மீது சேற்றை பூசி, நீ போய் சீலோவாம் குளத்தில் கழுவு என்கின்றார். அவனுடைய கீழ்ப்படிதல் அவனுக்கு வாழ்வு கொடுக்கின்றது. பார்வை கொடுக்கின்றது. நாமும் கீழ்ப்படிந்து புதுவாழ்வு பெற இறைவன் நம்மை அழைக்கின்றார். கிறிஸ்து தரும் பார்வை பெற்றவர்களாய் பிறருக்கு ஒளியாய் வாழ்வோம்.*

# பலி அல்ல இரக்கமே

**2011**
**அக்டோபர்**
**13**
**வியாழன்**

காலை
மத். 12:1–13

தி. வ.
மத். 12 : 7
**“ப–யையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்”**

மாலை
உபா. 4:1–10

சிந்தனை
**நான் இரக்கம் காட்டி வாழ்வோம், இரக்கம் பெற்றவர்களாய் மாற்றுவார்.**

மன்னா சேர்ப்போம்

பசி என்பது மனித வாழ்வில் இயல்பாக ஏற்படக்கூடியது. அது எந்நேரமும் மனிதனுக்கு ஏற்படலாம். மனித உட—ன் சுரப்பின், தசைகள் அதிகமாக இயங்கும் போது மனிதனுக்கு பசி ஏற்படுகின்றது. பசியைத் தீர்த்துக் கொள்ள மனிதன் உணவை நாடுகின்றான். இது அவனுடைய பசியைத் தீர்க்கின்றது.

இறைப்பணியாற்றி களைப்படைந்த சீடர்கள் பசியுடன் பயிர்வழியே நடந்து சென்றனர். பசியடங்க சீடர்கள் கதிர்களைக் கொய்து உண்கின்றதை பார்த்து கேள்வி கேட்கும் பரிசேயர்களின் நிலையை மத்தேயு நற்செய்தி நூல் விளக்குகிறது. ஓய்வு நாளில் செய்யக்கூடாத காரியத்தை சீடர்கள் செய்கின்றார்கள் என்று குற்றம் சாட்டுகின்றார்கள். ஓய்வு நாட்கள் இறை இல்லத்தை சுத்தம் பண்ணுவது, பணிவிடை செய்வது தகாத குற்றமல்ல என்பதை இறைமகன் இயேசு விளக்குகின்றார். “பரிசேய பாரம்பரியமே” தங்களுக்கு பெரிது என்கின்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கின்றது. இந்த எண்ணம் மாற்றம் பெற இறைவன், “ஆலயத்தைவிட பெரியவர்” இங்கு உள்ளார் என்பதை இவர்கள் அறிந்து கொள்ள, தன்னைக் குறித்து கூறுகின்றார்.

ப— மனிதனை நித்தியத்திற்கு அழைத்து செல்வது இல்லை. ஆனால் ஒரு மனிதனின் இரக்கம், தாழ்மை, அன்பு இவைகள் நித்திய வாழ்வுக்கு மனிதனை அழைத்துச் செல்கிறது. வழிப்பிரயாணமாய் ஒருவன் செல்கையில் அவனை கள்ளர்கள் காயப்படுத்தி, அவன் உடமைகளை பறித்து, குற்றுயிராக்கிவிட்டார்கள். தற்செயலாய் ஒரு ஆசாரியனும், லேவியனும் வருகின்றார்கள் அவர்கள் விலகிச் சென்றார்கள். ஆனால் ஒரு சமாரியன் வந்து அவனுக்குப் போதுமான உதவிகளைச் செய்து அவனைப் பராமரித்தான் (லூக். 10 : 36, 37) இம் மூவரில் எவன் பிறனாயிருந்தான்? என்ற கேள்வி இயேசு கேட்கும்போது அவன் கூறிய பதில் அவனுக்கு இரக்கம் காட்டியவனே என்றான். இரக்கம் நாம் வாழ்வில் வெளிப்பட நம்மை கடவுளுக்கு ஒப்புக் கொடுத்து பழைய ஏற்பாட்டின் வழிபாட்டு முறையாகிய ப—யை அல்ல, கிறிஸ்து நமக்கு கற்றுதந்த இரக்கத்தைப் பெற்று இரக்கம் காட்டி வாழ்வோம்.

# மனதுருகும் ஆண்டவர்

**2011**
**அக்டோபர்**
**14**
**வெள்ளி**

காலை
மத். 9:31–38

தி. வ.
மத். 9 : 37
**“. . . அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்”**

மாலை
ஏசா. 50:4–9

சிந்தனை
**நம்மை பார்த்து மனதுருகாமல் – அழிகின்ற ஆத்துமாக்களுக்காக மன துருகுவோம்.**

மன்னா சேர்ப்போம்

ஏழை ஒருவர் ஒரு தெரு ஓரமாக நடந்து சென்று கொண்டிருக்கின்றார். சற்று தூரம் செல்கின்ற போது ஓர் குப்பை தொட்டியி—ருந்து ஓர் குழந்தையின் அழுகுரல் சத்தம் கேட்கின்றது. சத்தம் கேட்கும் திசை நோக்கி பயணம் செய்கின்றார் குப்பைத் தொட்டி அருகில் சென்று பார்க்கின்றார். பிறந்த சில நாட்களே ஆன ஓர் அழகான ஆண்குழந்தை எறும்புகளால் தாக்கப்பட்டு கொடூரமாக வேதனையுடன் மரணபிடியில் துடித்துக் கொண்டிருந்தது. நானோ ஒரு பிச்சைக்காரன். இந்தக் குழந்தையை எப்படி பாதுகாப்பது என்று உள்ளத்தில் யோசிக்கின்றான். ஓர் முடிவுக்கு வருகின்றான். குழந்தை மீது மனதுருகுகின்றான். குழந்தையை எடுத்துக்கொண்டு தன் இருப்பிடம் நோக்கி நடந்தான். குழந்தையை வளர்த்தான். அவன் வா—பனானான். மிகுந்த இறைப்பற்றுடன் வளர்க்கப்பட்ட அவன் ஒரு மிஷனெரியாக மாற்றப்பட்டான். அவன்தான் இன்று உலகம் போற்றப்படுகின்ற மிஷனெரி வில்—யம் ஷெண்ட்— (ஐரோப்போ கண்டத்தை சார்ந்தவர்).

கிறிஸ்துவின் இறுதிக் கட்டளையும் அப்படிதான் அமைகின்றது. உலகம் முழுவதும் சென்று இறைப்பணி செய்யுங்கள். இறை அரசு உருவாக்கப்பட வேண்டும். இறையாட்சி எங்கும் மலர வேண்டும். அழிந்து கொண்டிருக்கும் மக்கள் மீது நமது ஆண்டவர் மனதுருகுகின்றார். ஏசாயா தீர்க்கனுக்குக் கொடுக்கப்படுகின்ற அழைப்பு, யார் என் காரியமாய் போவார். இந்த அழைப்பு இறைவனால் இன்று கொடுக்கப்படுகின்ற அழைப்பாக இருக்கின்றது.

விளைந்து கிடக்கின்ற நெற்கதிரை அறுவடை செய்ய ஆட்கள் தேவை. இப்படிப்பட்ட ஆட்களுக்காகத்தான் ஆண்டவர் மனதுருகுகின்றார். இறைவனின் திருப்பணி மனிதன் மீது மனதுருகுகின்ற திருப்பணியாக அமைகின்றது. அறுவடைக்குத் தேவையான ஆட்களை ஆண்டவர் அனுப்பும்படி உரிமையாளரிடம் மன்றாடுகிறார். நாமும் அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமா மீது மனதுருகுவோம், மன்றாடுவோம், அவர் பணி செய்வோம்.

# தேடிச் செல்பவர்

**2011**
**அக்டோபர்**
**15**
**சனி**

காலை
யோவா. 5:1–9

தி. வ.
யோ. 5 : 8
**“...எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட”**

மாலை
சங். 103:1–8

சிந்தனை
**இறைவன் நம்மை தேடி வருகிறார். நாம் இறைவனுக்காக மக்களை தேடுவோம்.**

மன்னா சேர்ப்போம்

மனித வாழ்வில் தேடும் அனுபவம் எப்போது ஏற்படுகின்றது என்று நாம் பார்க்கின்றபோது ஒன்றை இழந்த நிலை வரும்போது தேடுகின்றோம். இறைசாய—ல் உருவாக்கப்பட்ட மனிதன் பாவத்தின் மூலமாக மீட்பை இழந்து போகின்றான். இழந்த மீட்பை நமது இறைவன் தேடிவந்து நமக்குத் தருகின்றார். லூக்கா 19 : 10—இல் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார் என்று அறிகின்றோம்.

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் எல்லாரும் கைவிட்ட நிலையில் 38 ஆண்டு காலமாக வாழ்வு குறித்துப் புதிய எதிர்பார்ப்போடு பெதஸ்தா குளக்கரையில் காத்திருக்கிறார் நோயுற்ற மனிதர் ஒருவர். நம்பிக்கையில் எள்ளவும் துவண்டு போகாமல் நம்பிக்கையுடன் வாழ்வுக்காய் காத்திருந்தார். இக்காலங்களில் பல அரசியல் தலைவர்களையும், ஆத்மீகத்தலைவர்களையும், அவர் கண்டு கொண்டார். ஆனால் எவருமே அவனுக்கு உதவி செய்ய முன்வரவில்லை. குளம் கலக்கப்படும் பொழுதெல்லாம் அவனுக்குள் ஓர் ஏக்கம் வெதும்பியது யாராவது என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுவார்கள் என்று. ஆனால் அதில் ஏமாற்றத்தை மட்டுமே பெற்றான். இச்சூழ—ல் வாழ்வு கொடுப்பதற்காக இறைவன் அவனை தேடி செல்கின்றார்.

வாழ்வில் எல்லாவற்றையும் இழந்து என் எதிர்காலம் எப்படி அமையுமோ என்ற நிலையில் நாம் வாழும்போது இறைவன் நம்மைத் தேடி வருகின்றார். உலகம், உலக மனிதர்கள் நம்மைக் கைவிடலாம். கைவிடாத இறைவன் நம்மைத் தேடி வருகின்றார். படுத்து இருந்த இந்த மனிதனை இறைவன் சந்திக்கின்றார். அவனைப் பற்றி அவனிடம் விசாரிக்கின்றார். அவன் தனது நிலைமையை இறைவனிடம் சொல்லுகின்றான். அவனுடைய எதிர்ப்பார்ப்பை அறிந்த ஆண்டவர் உதவி நாடியவரின் விருப்பத்தை நிறைவேற்றுகின்றார். படுக்கையை எடுத்துக்கொண்டு நடக்கச் சொல்லுகிறார் நடக்கிறான் நன்றி சொல்லுகின்றான்.

இறைவன் நமக்கு வாழ்வு தருகின்றவராய் இருக்கின்றார். தேடிவரும் இறைவனை எதிர்நோக்கியிருப்போம்.

# முன்னேறு

**2011**
**அக்டோபர்**
**16**
**ஞாயிறு**
**இளையோர் ஞாயிறு**

காலை
1சாமு. 17:32–50

தி. வ.
சாமு. 17 : 37
**"... கர்த்தர் உன்னுடனே கூட இருப்பாராக"**

மாலை
மாற். 10:17–25

சிந்தனை
**இறை பயம் இறைவனோடு நம்மை இணைக்கும் பாலம். அது வாழ்வில் முன்னேறும் பாலம்.**

மன்னா சேர்ப்போம்

மனித வாழ்வில் இறைவனின் உடனிருத்தல் வெற்றிக்கு வழிகாட்டுகின்றன. ஆற்றல் நிறைந்த ஆண்டவரின் உடனிருத்தல் ஆற்றல் தந்து முன்னேறிச் செல்ல உதவி செய்கிறது.

தாவீது ஓர் இளைஞன். பெ—ஸ்தனாகிய கோ—யாத்தை வெற்றிக் கொள்ள ஆண்டவர் அவனைப் பயன்படுத்துகின்றார். இறைபயம் உள்ளவனாய் இறைவனைச் சார்ந்து இருக்கும்போது இறைவனும் நம்மைச் சார்ந்து இருக்கின்றார். தீங்குகள், பிரச்சனைகள், பொல்லாப்புகள் நம்மை நெருங்கும்போது இறைவனின் கிருபை நம்மில் இருப்பதை உணர முடியும். பெ—ஸ்தனாகிய கோ—யாத்தை வெல்ல தாவீது புறப்படும் நேரம் — சேனைகளின் தேவனாகிய கர்த்தரின் நாமத்தில் நான் உன்னிடம் வருகிறேன் என்று சவால் விடுகின்றான். இறைவனின் ஆற்றல் என்னில் இருக்கின்றது என்பதை உணர்ந்தவனாய் பெ—ஸ்தியனை மேற்கொள் கின்றான். அவன் முன்னேறி சென்று அவனை தன் கரங்களில் வைத்திருந்த கூழாங் கற்களினால் அவனைக் கொன்று போடுகின்றான்.

இறைவனின் கரம், பாதுகாப்பு, அரவணைப்பு நம்மீது இருக்கும்போது நாம் இறைவனில் முன்னேற முடியும். வாழ்வில் முன்னேறத் துடிக்கும் இளைஞர்கள் இறைவன் தாவீதுக்குள் இருந்தது போல் என் மீதும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வளர வேண்டும். திருச்சபை, சமுதாயம், குடும்பம், தனி வாழ்வு என்கிற நிலையில் வெற்றியுள்ள வாழ்வுக்கொன்று முயற்சிக்க வேண்டும். இறைவனின் துணையோடு சவால்களை எதிர்கொண்டு வாழ்வில் முன்னேறிச் செல்ல உழைக்க வேண்டும். தாவீதைப் போன்று நம்பிக்கையுடன் முன்னேறும் போது வெற்றி நிச்சயம்.

இந்நிலைக்கு நாம் உயர்த்தப்பட பின்னானவைகளான இறைவன் விரும்பாத பொய், கோபம், பொறாமை, இருமனம், பாராட்டு போன்றவைகளை மறந்து முன்னானவைகளான இறைவன் கற்றுத்தந்த அன்பு, பரிவு, பகிர்வு போன்றவைகளோடு முன்னேறுதல் அவசியம். ஆகவே இறைவனை பின்பற்றி முன்னேறுவோம், வெற்றி காண்போம்.

# சிருஷ்டிகரை நினை

2011
அக்டோபர்
17
திங்கள்

**தூய லூக்காவின் திருநாள்**

காலை
பிர. 12:1–14

தி. வ.
பிர. 12 : 1

**“நீ உன் வா—ப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை”**

மாலை
1தீமோ. 6:11–21

சிந்தனை

**தூய நினைவுகள் தூயவரின் அருளை பெற வழிவகுக்கும்.**

மன்னா சேர்ப்போம்

மனித வாழ்வில் படைத்தவரை நினைப்பது சிறந்தது. அதிலும், வா—ப பருவத்தில் சிருஷ்டிகரை நினைப்பது சாலச்சிறந்தது. நினைவுகள் மனிதனின் ஒவ்வொரு பருங்களை பொறுத்தே அமைகின்றன. வா—பத்தின் நினைவுகள் நிலைகுலைந்து போகின்ற வாழ்வுக்கு நேராக வழி நடத்தி செல்வதால் நீ உன் வா—ப பிராயத்திலே சிருஷ்டிகரை நினை என்று பிரசங்கி ஆலோசனை கூறுகிறார்.

தன்னை சிருஷ்டித்த கடவுளை நினையாது சக மனிதர்களை நினைத்து வாழ்வது அவ்வளவு மேலான அனுபவம் அல்ல. கண்களைக் கவர்ச்சிக்கு நேராகவும், உள்ளத்தை ஊசலாடிக் கொண்டுச் செல்லும் இந்த பருவத்திலே தேவன் நம்மை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்பதை அறிவது அவசியம்.

எட்டாம் வயதில் யோசியா ராஜாவாகி முப்பத்தொரு வருஷம் எருசலேமை அரசாண்ட போது கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதைச் செய்து ராஜ்யபாரத்தில் எட்டாம் வருஷத்தில் மக்கள் சிருஷ்டியை தொழுது வந்த நிலையில் மேடைகள் தோப்புகள் சொரூபங்கள் விக்கிரகங்கள் ஆகியவை அழித்து போட்டு யூதாவையும் எருசலேமையும் சுத்திகரித்தான். காரணம் சிருஷ்டிகரை நினைத்தான். சிருஷ்டியை தொழுவதை அழித்தான்.

உள்ளத்தின் நினைவுகளை ஆண்டவர் அறிவார். நெஞ்சே நீ நினைப்பது யாரை. நித்திய வாழ்வு அருளும் ஆண்டவரை நினைத்தால் நிம்மதி வாழ்வில் பெருக்கெடுக்கும். ஆற்றல் உள்ள வா—ப பருவத்தில் தன்னைப் படைத்துக் காத்து மீட்டு வாழ்விக்கும் திரியேகக் கடவுளை நினைப்போம்.

நினைவுகள் நிலைக்குலைந்து போக வாழ்வில் வழிதேடாமல் நிலையான ஆதாரமாய் இருக்கும் நித்திய கன்மலையாம் இயேசுவை வாழ்வின் ஆதாரமாய் கொண்டு வாழ்ந்தால் வாழ்வும் வா—பமும் வளம் பெறும்.

2011
அக்டோபர்
**18**
செவ்வாய்

காலை
பி-. 3:1-16

தி. வ.
பி-. 3 : 14
**"... தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்"**

மாலை
தானி. 1:8-21

சிந்தனை
**இலக்கை நோக்கி ஓடினால் இலட்சியத்தை அடையலாம்.**



# இலக்கை நோக்கி

கிறிஸ்தவ வாழ்வு பந்தய சாலையில் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி ஓடுகின்ற வாழ்வு என்று தூய பவுல் கூறுகின்றார். பந்தயச் சாலையில் ஓடுகிறவன் இலக்கை நோக்கி ஓடுகிறான். எப்படியாகினும் பரிசுப் பொருளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஓடுகிறான். திருமறையும் பரிசு பொருளை பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடுங்கள் என்று ஆலோசனைத் தருகிறது.

பற்றாளர்களாகிய நம் வாழ்க்கைப் பயண ஓட்டத்தில் குறிப்பிட்ட இலக்கினை அடைய வேண்டும் என்ற குறிக்கோள் எப்போதும் இருக்கவேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே அடைய வேண்டிய இலட்சியத்தை அடைய முடியும். வாழ்வில் எல்லோரும் உயர்ந்த குறிக்கோளுடன் தான் பயணத்தை ஆரம்பிக்கிறார்கள். ஆனால் அதில் விடாப்பிடியுடன் வைராக்கியமாக இருப்பவர்கள் ஒரு சிலர் தான். அவர்கள் தான் நீடித்து நிற்பவர்கள். பலர் குறிக்கோள்களை வரையறுக்கிறார்கள். ஆனால் சிலர் மட்டுமே அதில் உறுதியாக இருக்கிறார்கள். நம் இலக்குகள் எல்லாம் அற்பமானவை அவற்றை அடைவதிலேயே நாம் அற்புதமானவற்றை இழந்து விடுகிறோம்.

பந்தய சாலையில் பலர் ஓடுவார்கள். ஒருவனேப் பரிசை வாங்குகிறான் என்றால் கவனம் எல்லாம் இலக்கிலேயே இருந்ததால்தான் வெற்றி அடைய முடியும். ஒரு நிலைக்கு வந்ததும் இடையில் நின்று இறுமாப்புடன் தன்னையே புகழ்ந்து கொண்டிராமல் தான் நிற்கும் இடத்துக்கும் முடிவு எல்லைக்கும் இடையில் உள்ள தூரத்தை கவனத்தில் கொண்டால் தான் இலக்கை அடைய முடியும். இலக்கை அடையாதவர்கள் வேறு காரியங்களில் ஈர்க்கப்பட்டு சரியாக ஓடாததினால் பலர் தோல்வியை சந்திக்க ஒருவரே பரிசு பெறுகிறார். ஓட்டப்பந்தயத்துடன் கிறிஸ்தவ வாழ்க்கை ஒப்பிடப்பட்டிருப்பதை தவறுதலாக கொள்ளுதல் கூடாது. ஓட்டப் பந்தயத்திற்கான இலட்சிய வெறியும், விடா முயற்சியும், வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வமுமே நாம் கருத்தில் கொள்ள வேண்டியவை. கிறிஸ்தவ வாழ்வில் முதல் வருவோர்க்கு மட்டுமல்லாமல் ஓட்டப்பந்தயத்தினை முடிப்பவர் யாவருமே பரிசை பெறுவர்.

**2011**

**அக்டோபர்**

**19**

**புதன்**

காலை

யோபு 12:7–13

தி. வ.

யோபு 12 : 12

**"முதியோரிடத்தில் ஞானமும் வயது சென்றவர்களிடத்தில் புத்தியும் இருக்குமே"**

மாலை

ரோம. 10:9–17

சிந்தனை

**ம முதுமை உடலோடு தொடர்புடையது. முதிர்ச்சி மனதோடு தொடர்புடையது.**

மன்னா சேர்ப்போம்

# முதியோரின் ஆலோசனை

முதுமை என்பது உடல் தளர்ந்து போகிற பருவம். உடல் புதுப்பிக்கப்படாத போது மனமும் களைப்படைந்து அயர்ந்து போகிறது. முதியவர்கள் வயது வரம்பில் முதுமையை அடைந்தாலும் அவர்களின் ஆலோசனை ஆரோக்கியமானது. முதியவர்களை இளைஞர்கள் அநேக நேரங்களில் சற்று வெறுப்புடன் மரியாதை குறைவுடன் பார்க்கின்றனர். காரணம் முதியவர்களின் ஆலோசனை அளிக்கும் குணமேயாகும். எப்போதும் நமக்கு புத்தி சொல்வது தான் பெரியவர்களின் வேலை என்று எரிச்சலோடு பார்ப்பவர்களும் உண்டு. "முதியோர் சொல் முன்னே கசக்கும், பின்னர் இனிக்கும்" என்பது பழமொழி. தங்கள் அனுபவ ரீதியாக முதியோர்கள் நமக்கு எப்போதும் எதிர்காலத்தைச் சார்ந்து நற்காரியங்களை ஆலோசனையாக அளிப்பதை நாம் ஏற்க வேண்டும். மேற்போங்காக அவைகள் நமக்கு வெறுப்பையோ, வேதனையையோ அளித்தாலும் அவைகளின் ஆழம் நமக்கு ஆசீர்வாதமாகவே இருக்கும். முதியவர்கள் அறிவு, மதி நுட்பம், தொழில் நுட்பம் போன்றவைகளுக்கு மேலாக "பட்டறிவு" எனும் வாழ்வு சார்ந்த ஞானத்தால் உயர்ந்தவர்கள்.

யோசுவா, இஸ்ரவேலரின் மூப்பர்கள் தலைவர்கள், அதிபதிகள் மற்றும் நாட்டு மக்கள் அனைவரையும் கூடி வரச் செய்து நீங்கள் தொடர்ந்து நலமான வாழ்வைப் பெற வேண்டுமானால் என் அனுபவத்தைக் கேளுங்கள் என்று கூறி கடவுளின் நியாயப்பிரமாணத்தை விட்டு வலப்புறம் இடப்புறம் விலகாமல் கைக்கொள்ள தீர்மானம் பண்ணிக் கொள்ளுங்கள் என்று கூறுகிறார்.

சிமியோன்,யோசேப்புக்கும் குறிப்பாக மரியாளுக்கும் கூறிய ஆலோசனை வார்த்தைகள் வேதனையுள்ளவைகளாகத் தெரிந்தாலும் இயேசு கிறிஸ்துவின் பாடு மரணங்களைத் தான் குறிப்பிட்டதை பின்னர்தான் அவர்கள் அறிந்திருப்பார்கள். (லூக்கா2 : 34, 35). முதியோரின் ஆலோசனைகளை நாம் வெறுத்தொதுக்காமல் அதை விருப்பத்துடன் ஏற்று வாழ்வில் ஆசீர்வாதங்கள் பெற நம்மை அற்பணிப்போம்.

# அழைப்பில் நிலைத்திருத்தல்

**2011**
**அக்டோபர்**
**20**
**வியாழன்**

காலை
1கொரி. 7:20–24

தி. வ.
1கொரி. 7:24
**“அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன்”**

மாலை
யாத். 4:1–12

சிந்தனை
**அழைப்பில் நிலைத்திருந்தால் நிஜமான பரகதி வாழ்வு.**

இவ்வுலகில் கிறிஸ்தவர்கள் வெவ்வேறு நிலையிலே அழைக்கப்பட்டவர்கள் என்ற தனிச்சிறப்பு கிறிஸ்தவர்களுக்கு உண்டு. அது இறைமக்களாக, இறைபணியாளர்களாக, இறைவாக்கினர்களாக, நியாயாதிபதிகளாக, நீதித் தலைவர்களாக, சீடர்களாக, அப்போஸ்தலர்களாக என்று அழைக்கப்பட்டு இருக்கின்றார்கள். இவ்வாறு அழைக்கப்பட்ட அழைப்பிலே அவனவன் அழைத்தெப்படியோ அப்படி அவனவன் நடக்கக் கடவன்.

கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான். அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான்.

அழைப்பை அலக்கழிப்பது அபத்தத்தை உண்டாக்கும். வளமையைக் காட்டி நம்மை வழிவிலக செய்கின்ற சூழல் உண்டு. வறுமையைத் தந்து நம்மை வழிவிலக செய்கின்ற சூழல் உண்டு. கலப்பையின் மேல் கை வைத்தவன் திரும்பிப் பார்க்காமல் முன்னோக்கிப் பார்ப்பது போல நம் கண்கள் நேரானவைகளை நோக்கக் கடவது. இயேசுவின் அழைப்பை ஏற்க விரும்பாமல் பலர் பல சாக்குப்போக்குகளை சொல்வதை காணலாம். கடவுள் தன் ஜனத்தை மீட்க மோசேயை அழைக்கின்றார். ஆனால் அவனோ “நான் திக்குவாயன்'' பேசத்தெரியாதவன் என்ற குறைபாட்டை சொன்னாலும் கடவுளின் அழைப்பை புறக்கணிக்காமல் ஏற்றுக்கொண்டு அதில் நிலைத்திருக்கிறார். நாமும் எச்சூழ—லும் என்னை அழைத்த ஆண்டவர்க்கு நான் அடிபணிந்து வாழ்வேன் என்பதும் அவர் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அரிய செயல்களை நான் அவருக்காக செய்வேன் என்பது தான் நாம் அழைக்கப்பட்ட அழைப்பின் மேலான அனுபவம். இந்த மேலான அனுபவத்தில் நிலைத்திருந்து செயலாற்றியவர்கள் எண்ணிறைந்த காரியங்களை கடவுளுக்காக செய்தனர். சாதாரணமானவர்கள் அசாதரணமாக காரியங்களை நடப்பித்தார்கள். காரணம் இறை பெலத்தோடு செய்தனர். அழைப்பில் நிலைத்திருந்தவர்களுக்கு இயேசு அருளும் நிலைவரமான ஆசீர்வாதங்கள் உண்டு.

2011
அக்டோபர்
21
வெள்ளி

காலை
யோவா.15:18–27

தி. வ.
1யோ. 4 : 14
**“பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்”**

மாலை
ஓசி. 11:1–9

சிந்தனை
**சான்று பகர நம்மை நடத்துவது இயேசு. சான்று பகர நம்மை கெடுப்பது பிசாசு.**



# சான்று பகர்வோம்

சான்று பகர்தல் என்பது கிறிஸ்தவ வாழ்வின் மேலான அனுபவம். கிறிஸ்தவ வாழ்வு, வாழும் கடவுளுக்கு வாழ்நாள் முழுவதும் சான்று பகர்த—ன் வாழ்வு. பிதாவாகிய கடவுள் குமாரன் இயேசுவை உலகில் தந்தருளி மீட்பின் திட்டத்தை வெளிப்படுத்தினார். இயேசுவின் பிறப்பு, வாழ்வு, மரணம், அதன்பின் உண்டான உயிர்த்தெழுதல், இவற்றிற்கு கிறிஸ்தவர்கள் சான்று பகருகின்றனர். இயேசு சீடர்களிடம் நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் (லூக்கா 24 : 48) என்றும், மேசியாவின் திருப்பணிகள் முழுமைக்கும் தமது சீடர்கள், விண்ணேறும் ஆண்டவர் சாட்சிக்காக நிறுத்திச் சென்றார். ஆனால் தூய ஆவியர் உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று உலகின் கடை எல்லை வரைக்கும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் என்று நற்செய்தியின் பரவலாக்கத்துக்குச் சீடர்களை சாட்சியாக ஆண்டவர் இயேசு நிறுத்தியதில் புதிய பொறுப்பை இயேசுவின் விண்ணேற்றத்தால் சீடர்கள் பெற்றுக் கொண்டனர்.

இயேசுவின் வாழ்க்கையில் அவரது உரைகளும், அற்புதங்களும், அடையாளங்களும், ஆண்டவனின் இறைத்தன்மைக்கு சான்று பகிர்ந்தன. சான்று பகரும் பொறுப்பினை சீடர்கள் ஏற்றுக் கொண்டனர். ஆண்டவருக்குச் சான்று பகர்தல் துன்புறுத்தல்களைத் தரும் ஒன்று. இந்த துன்புறும் திருப்பணிக்கு சீடர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவே கடவுளிடம் காத்திருந்தனர்.

கிறிஸ்தவ விசுவாசத்தை அறிக்கையிட்டுச் சான்று பகரும் வாழ்வு வாழ அழைக்கப்பட்டுள்ளோம். கிறிஸ்தவர்கள் இன்று நன்மதிப்பினை இழந்துக் கொண்டிருக்கிறோம். அனைத்து குற்றங்களிலும், கிறிஸ்தவர்களின் பெயர்களே அதிகமாக இடம் பெறுகின்ற அவல நிலையினை நாம் காண்கின்றோம். கிறிஸ்தவ நன்னடத்தையே நமது வாழ்வில் பின்பற்றும் பொருட்டு இயேசுவின் போதனைகள், வாழ்க்கை முறை, விசுவாசம், பொறுமை மற்றும் சகிப்புத் தன்மை ஆகியவற்றைக் கைக்கொண்டு சான்று பகர்வோம்.

2011

அக்டோபர்

22

சனி

காலை

சங். 1

தி. வ.

சங். 1 : 3

**“ . . . தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலை யுதிராதிருக்கிற மரத்தைப் போ—ருப்பான்”**

மாலை

லூக். 13:6–9

சிந்தனை

**கனி கொடுத்தால் களிகூறுவோம். க்னிகொடாவிட்டால் கவலைப் படுவோம்.**



# கனி கொடுப்போம்

மனித வாழ்வு கடவுளின் அருட்கொடைகளில் ஒன்று. அத்தகைய மனித வாழ்வைக் கனிவுடன் ஏற்று கனிகொடுக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

மரத்தை நடுபவன் பலனை எதிர்ப்பார்ப்பதுபோல நம்மைப் படைத்த கடவுளும் நம்மிடம் கனியை எதிர்பார்க்கிறார். நம்மைச் சூழ வாழ்ந்து கொண்டிருக்கும் சக மனிதர்களும் சகலவித நற்கிரியைகளிலும் நாம் வளர்ந்து கனி கொடுப்பதை விரும்புகின்றனர். அத்தகைய கனிகளான ஆவியின் கனிகள் ஒன்பதையும் அன்றாட வாழ்வுச் சூழ—ல் நாம் கொடுக்க வேண்டும். கனி கொடுப்பதற்குப் பருவநிலைகள் உண்டு. அந்தந்த பருவங்களில் கனி கொடுப்பது சிறப்பிற்குரிய ஒன்று காலம் தவறி கனி கொடுத்தால் தவறுக்கு நாம் துணைபோனோம் என்பதை புலனாக்குகிறது.

நீர்நிலைகளின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தை போ—ருக்கின்ற தன்மை மேலானது. அவனுடைய வாழ்வு வெற்றிகரமானது. செழிப்பு, கனி நிறைந்த தன்மை, பசுமை ஆகியவை இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களின் சிறப்பியல்புகளாகும்.

மனித வாழ்க்கையில் ஒவ்வொரு நாளையும் கிருபையின் நாளாகத் தந்து நம்மைக் கனி கொடுக்க பூமியில் நாட்டப்பட்டிருக்கிற மனிதர்களாகிய நாம் நம்மை படைத்து காத்து மீட்டு வாழ்வளிக்கும் கடவுளின் எதிர்பார்ப்புக்கு நாம் பலனைக் (கனி) கொடுக்க வேண்டும். பகட்டாய் நின்று பூமிக்குப் பாரமாய் இருந்து பலனைத் தராத அத்திமரத்தைபோல் நாம் வாழ்ந்தால் சபிக்கப்படுவோம். எருவுக்காவது ஆகட்டுமே என்றுமே என்று எரிக்கப்படுவோம்.

கனி கொடுப்பது மரத்தின் சூழ—னால் அறியப்படுகிறது போல நல்ல மரம் நல்ல கனியைக் கொடுக்கும் கெட்ட மரம் கெட்ட கனியைக் கொடுக்கும். நம் வாழ்வு சூழ—ல் நல்ல மனிதர்களாக வாழ்ந்தால் நல்ல கனியைக் கொடுப்போம். பரமனேசு வருகையின் முன்னே பலனை கொடுப்போம் பரலோக வாழ்வை பெறுவோம்.

**2011**

**அக்டோபர்**

**23**

**ஞாயிறு**

காலை

ஆதி. 1:26–31

தி. வ.

ஆதி. 1 : 27

**“தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்”**

மாலை

எபி. 8:1–12

சிந்தனை

**இறைசாயல் இறைவனை சார்ந்திருப் பதற்கே!**

மன்னா சேர்ப்போம்

# இறைசாயல்

*மனிதனை இறைவன் மண்ணினாலே தமது சாய—ல் படைத்தார். மனிதனை தேவன் படைத்தபோது தமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக என்கிறார். இறைசாயல் என்பது திரித்துவ தேவனைக் போல மனிதன் கொண்டுள்ள ஆவி, ஆத்துமா, சரீரத்தைக் குறிக்கும். மனிதன் பெற்றுள்ள ஆன்மீக பண்பே தேவனின் சாயல் (ஆதி. 1 : 27, 5 : 1). இறைவனது சாயல் மனிதனுக்கு ஒரு வாக்குறுதி. எபிரேய மொழியில் சாயல், ரூபம் என்பதற்கு ற்செலெம், தெமூத் ஆகிய பதம் பயன்படுத்தப்படுகிறது. இறை சாயல், உடல், வடிவு என கூற முடியாது.*

*மனிதனின் அழியாமை பண்பு இறைசாயல். மனிதன் கடவுளின் சுவாசத்தினால் நிலை நிற்கிறான். அவன் ஆவி, மனசாட்சி, நித்தியத்தை பற்றிய உணர்வு, தன்னறிவு, படைப்புத் திறன் உடையவன். எனவே அவன் இறைசாயலை உடையவனாக இருக்கிறான். இறைசாய—ல் தான் மனிதன் தனது சிருஷ்டிகரான தேவனோடு உறவாடுகிறான். இறைசாயல் மனிதனுக்கும் — இறைவனுக்கும் உள்ள தொடர்பை ஏற்படுத்துகிறது. மனிதனுக்குத் தன்னைப் படைத்த தேவனை மகிமைப்படுத்தவும் அவரது மகத்துவத்தையும் அறிவிக்கவும் கடமை உண்டு.*

*இறைசாய—ல் பரிசுத்தமாக்கப்பட்ட மனிதன் தனது பரிசோதனைக் காலத்தில் பரிதாபமாக வீழ்ந்தான். இறைசாய—ல் உருவாக்கப்பட்ட மனிதன் இறைசாயலை இழந்தான். எனவே இறைவனே அம்மனிதனை மாற்றி அமைப்பதற்கு அன்பு கொண்டிருந்தார். பிற அனைத்து படைப்புக்களையும் விட மேலான அறிவை தேவன் மனிதனுக்கு வழங்கினார். அனைத்தையும் ஆளும் அதிகாரம், ஆற்றலை வழங்கினார். மனிதனே படைப்புகளுக்கு பெரிடும் அதிகாரத்தையும் பெற்றான்.*

*தேவன் தம்முடைய சாயலாக நம்மை சிருஷ்டித்திருக்கிறார். எனவே இறை சாயலோடு நிலைத்திருப்போம். அவர் தரும் வாழ்வை உரிமையுடன் பெறுவோம். இறையாசி நம்மனைவரோடும் தங்கட்டும்.*

# நிறைவுதரும் இறைசாயல்

**2011**
**அக்டோபர்**
**24**
**திங்கள்**

காலை
சங். 17

தி. வ.
சங். 17 : 15
**"...நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்"**

மாலை
லூக். 11:1–10

சிந்தனை
**இறையாட்சியில் பங்கேற்பதே இறைசாயலின் நிறைவு.**

மன்னா சேர்ப்போம்

குறைவும் நிறைவும் வாழ்வில் மனிதன் சந்திக்கின்ற ஒன்று. ஒளியேற்றப்படும் இடத்தில் இருள் மறைந்துவிடுவது போன்று வாழ்வின் குறைவுகள் இறைவனால் நிறைவாக்கப்படுகிறது. இறைசாயலில் படைக்கப்பட்ட மனிதன் இறைவனின் பண்பு நெறிகளை தன் வாழ்வின் அடித்தளமாக ஏற்று வாழும்போது இறைசாயல் தன்னில் நிறைவடைகிறதைக் காண்கிறான்.

சங்கீதம் 17 மாசற்ற அடியவர் ஒருவரின் மன்றாட்டு என அழைக்கப்படுகிறது. சவுலின் தாக்குதலுக்கு தப்பியோடிய தாவீது இறைவனை நோக்கி அபயக்குரல் எழுப்பி உதவிக்காக மன்றாடுகிறார். தன் குற்றமின்மையை இறைவனிடம் எடுத்துக்கூறி உதவி வேண்டுகிறார். எச்சூழலிலும் மன்றாட்டின் வழியாக இறைவனிடம் தன் ஆழ்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார். வசனம் 15இல் நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன் என்கிறார். விழித்தெழும்போது எனும் சொல்லை மூன்று விதங்களில் பொருள் கொள்ள முடிகிறது.

1) இரவு நேரத்தின் தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்வது
2) துன்பங்கள், துயரங்களிலிருந்து விழித்துக் கொள்வது
3) மரணம் என்னும் நீண்ட உறக்கத்திலிருந்து உயிர்த்தெழும்போது

பாவத்தின் பெருக்கத்தினால் படைப்பில் தான் பெற்ற இறைச்சாயலை இழந்து தவிக்கிறான். இழந்துவிட்ட இறைச்சாயலின் நிறைவினைப் பெற நிறைவாழ்வின் உறுதிப்பாடு நிச்சயம் தேவை. தூக்கத்திலிருந்து அல்லது துன்பங்களிலிருந்து விடுபட்டு விழித்துக்கொள்வதால் இறைச்சாயல் நிறைவடைவதில்லை. மாறாக மரணத்தின் நிலையிலிருந்து உயிர்த்தெழும்போது இறைவனோடு இணையும் நிலையில் தான் இறைச்சாயலின் முழுமையை அடைகிறோம். இறைச்சாயலின் முழுமையை நம்மில் காண இறைவனைப் போன்ற தூய வாழ்வு தேவை. கிறிஸ்துவின் வழியில் நின்று அவரது மாதிரியை ஏற்று நற்செய்திக்கு சான்றாக வாழ நம்மை அர்ப்பணம் செய்து இறைச்சாயலைப் பெறுவோம்.

**2011**
**அக்டோபர்**
**25**
**செவ்வாய்**

காலை
**1தீமோ. 6:11–16**

தி. வ.
1தீமோ. 6 : 12
**“விசுவாசத்தின் நல்ல போராட் டத்தைப் போ ராடு, நித்திய ஜீ வ னை ப் பற்றிக்கொள்”**

மாலை
யோபு **29:1–15**

சிந்தனை
**போராட்டத்தால் வாழ்வோருக்கு ஜீவ கிரீடம் உண்டு.**



# போராட்டத்தில் வாழ்வு

கிறிஸ்தவ வாழ்வு என்பது நம்முன் செல்லுகின்ற, காண்கின்ற பாதையில் எல்லாம் நடப்பது அல்ல. வெள்ளத்தால் இழுத்து நெடும்போக்கில் அடித்துச் செல்கின்ற ஓடம் போன்றது அல்ல. கரைபுரண்டு வரும் வெள்ளத்திலும் எதிர்நீச்சல் போடுகின்ற மீனைப் போன்றதாகும். போர்க்களமான வாழ்வு தான் நம் ஆன்மீக வாழ்வு. உலகில் நாம் போராட்டத்தை சந்திக்கும் ஏராளமான சூழ்நிலைகள் நமக்கு உண்டு. அத்தகைய தருணங்களில் நாம் தடம் புரண்டு விடாதபடி கர்த்தனாம் இயேசுவின் துணையோடு போராடுவது மேலானது.

இப்பிரபஞ்சத்தோடும், அதிபதிகளோடும், துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் வான மண்டலப் பொல்லாத ஆவியின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. இத்தகையப் போராட்டங்களில் பிரிய இயேசுவின் சேனை வீரர்களாய் நின்று ஜெபித்துப் போராடி ஜெயத்தைத் காண்பது சிறப்பு. நாம் கிறிஸ்தவர்களாயிருப்பதால் பாடுபட்டு வெட்கப்படாமல்ருந்து தேவனுடைய நாமத்தை நாம் மகிமைப்படுத்தக் கடவோம். நாம் பாடுபட்டால் நாம் அதற்குரிய பலனைப் பெறுவோம். போராட்டம் சூழ்ந்த வாழ்வு கிறிஸ்தவர்களா யிருப்பதினால் வரலாம். கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் வரலாம். வந்தாலும் இது தனக்கு பாக்கியமே என்று எண்ணும்போது நமக்குப் பரலோகில் பரிசு கிடைக்கிறது.

தூய பவுலடிகளாரும் விசுவாசத்தினால் உலகத்தோடு போராடியவர் சிறைவாசம், கப்பல் சேதம், உயிர் சேதம் என்று வந்த பிற்பாடும் கிறிஸ்துவின் அன்பை விட்டு பிரியாத ஆன்மீக பேராளியாக நின்று நல்ல போராட்டத்தை போராடி விசுவாசத்தை காத்துக் கொண்டு வாழ்ந்ததினால் இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது என்று உறுதியாகக் கூறுகிறார்.

நம் விசுவாச வாழ்வு உலகத்தை

# உறவால் புதுவாழ்வு

**2011**
**அக்டோபர்**
**26**
**புதன்**

காலை
சங். 133

தி. வ.
சங். 133 : 1
**"...சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?"**

மாலை
2கொரி. 8:1–15

சிந்தனை
**உறவு இல்லை எனில் உதவி இல்லை. உதவி இல்லை எனில் உறவு இல்லை.**



உறவு என்பது உன்னதராகிய கடவுளுக்கும், உடன்வாழ் மக்களிடையேயும் நாம் காட்டும் நட்பு, ஐக்கியம், அன்பு போன்றவையாகும். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையேயான உறவு செங்குத்தான உறவு, மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையேயான உறவு படுகிடையான உறவு. இந்த உறவு நீடிக்கவே இயேசு கிறிஸ்து விண்ணுலகக் கடவுளோடும், மண்ணுலக மக்களோடும் வைத்த உறவு. வாழ்நாளிலும் ஊழிய காலங்களிலும் என்றும் இணை பிரியாத உறவை வைத்திருந்தார்.

முதல் மனிதனாகிய ஆதாம் கடவுளோடுள்ள உறவில் வீழ்ச்சிக்கு உள்ளானான். அவனுடைய சந்ததி காயீன் ஆபேல் சக உடன் பிறப்புகளோடுள்ள உறவை இழந்து போகிறது. இத்தகைய உறவு விரிசல்களால் எங்கும் நிம்மதியற்ற இருள் வாழ்க்கையை சூழ்ந்தது. இதனால் குடும்பங்களிலும் சமூகத்திலும் தேசத்திலும் மனித உறவில் விரிசல், பல விபரீதங்களைத் தான் கொண்டு வந்தது.

கடவுளின் முழு விருப்பமும் ஏக்கமும் தன்னுடைய சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் தன்னோடும் சக மனிதனோடும் நட்பு உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தான். அந்த விருப்பத்திற்கும் உட்பட்டு உறவில் பலப்பட முன்வந்தவர்கள் தான் வாழ்வில் புது வாழ்வை கண்டனர். யாக்கோபு ஏசா மற்றும் யோசேப்பும், அவன் சகோதரர்களும் அவர்கள் பிரிந்து வாழ்ந்த போது வாழ்வு ஏற்றம் பெறவில்லை. ஏமாற்றம் தான் வந்தது. இணைந்து வாழ இசைவு தெரிவித்த போது அதனால் கண்ட இன்பம் இவ்வளவு என்று அளவாகவில்லை என்றுதான் சொல்ல முடியும். அந்த அளவிற்கு உறவின் ஆரோக்கியம் அவர்களை வழிநடத்திச் சென்று பாழான வாழ்வை மாற்றி புதுவாழ்வு பெற வழிநடத்திச் சென்றது. நாமும் நமது உறவுகளை ஐக்கியப்படுத்தி ஒருமனப்பட்டு ஒவ்வொரு நாளும் வாழ்வோம். அது ஆசீர்வாதமானது மேலானது, இன்பமானது.

# வாழ்வில் மாற்றம்

**2011**
**அக்டோபர்**
**27**
**வியாழன்**

காலை
யூதா 20–25

தி. வ.
யூதா 23
**"மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத் தள்ளுங்கள்"**

மாலை
சங். 51:14–19

சிந்தனை
**மாம்ச கறை கடவுளிடமிருந்து நம்மை பிரிக்கும்.**



மாறிவரும் உலகச் சூழ—ல் நாமும் மாறிக்கொண்டே இருக்கின்றோம் என்பதே உண்மை. தீயவைகள் என கருதப்பட்டவை "நல்லது" என நாம் நமது வாழ்வில் அனுமதித்துவிட்டோம். ஊடகம் காட்டும் தகவுகளுக்கு ஏற்ப நமது வாழ்வு அமைந்தால் நல்லது என அதன்படி வாழவும் கால் வைத்திருக்கிறோம். கிறிஸ்தவ தகவுகள் நமது வாழ்வில் தடுமாறத்தான் செய்கின்றது. அப்போஸ்தலனாகிய யூதா இதனை "கடைசி கால நிகழ்வுகள்" என எச்சரிக்கிறார் (யூதா 18). முறுமுறுப்பு, மாம்ச இச்சை, பெருமை, முகஸ்துதி என பல பாவங்களை பட்டிய—டுகிறார். இத்தகு பாவங்கள் கடவுளிடம் நாம் கொண்டிருந்த பற்றுறுதியி—ருந்து நம்மை விலக வைத்து மாம்சத்தால் கறைபட வைக்கிறது.

யூதா தனது கடிதத்தில் சோதோம் கொமோரா பட்டணத்தாரின் தவறான வாழ்வு இன்றும் தொடர்கிறது என்றும், மாம்சத்தை அழுக்கடைய செய்து கடவுளின் மகத்துவங்களை தூசிக்கிறார்கள் எனவும் குறிப்பிடுகிறார் (யூதா 8). இன்று "சிற்றின்பமே" வாழ்வு எனும் மனநிலை வளர தொடங்கியதின் விளையே மதுபானம். கோடிகணக்கான விற்பனைக்குக் காரணம், மறைமுகமான பாவங்கள், எனவும் பட்டிய—டலாம். "தூரம் சென்ற நிலை" எனவும் இதனை குறிப்பிடலாம்.

அப்போஸ்தலன் இச்சூழ——ருந்து விலகிட சொல்லும் வழிமுறைகள் :

1. மகா பரிசுத்தமான விசுவாசத்தில் உறுதிபடுதல் (யூதா 20)
2. தூய ஆவியருக்குள் ஜெபம் பண்ணுதல் (யூதா 20)
3. கடவுளின் இரக்கத்தைப் பெற காத்திருத்தல் (யூதா21)
4. கறைபட்டிருக்கும் வஸ்திரங்களை வெறுத்து தள்ளுங்கள் (யூதா 23)

கிறிஸ்தவ வாழ்வில் கறைபடாமல் வாழவே அழைக்கப்பட்டுள்ளோம். கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள் நாம். அழுக்கடைந்து கிடக்கும் நம் வாழ்வை தூய்மையாக்குவோம். அவர் வருகைக்கு நம்மை ஆயத்தமாக்குவோம்.

# நீதி செய்தல்

**2011**
**அக்டோபர்**
**28**
**வெள்ளி**

காலை
ரோ. 6:12–20

தி. வ.
ரோ. 6 : 18
**"பாவத்தினின்று நீங்கள் விடு தலை யாக்கப் பட்டு, நீதிக்கு அ டி மை களானீர்கள்"**

மாலை
சங். 112

சிந்தனை
**நீதிக்கு அடிமையாகி நீதி செய்வோம்**



கடவுள் நீதியுள்ள நியாயாதிபதி. நீதிபரர். நீடிய பொறுமையுள்ள கடவுள் நீதி செய்கிறவராக இருக்கிறார். நீதி என்பது சமூகத்தை ஐக்கியமாக நடத்தி செல்லும் கருவி. அது கடவுளுக்கும், மனிதனுக்கும், பிற படைப்புகளுக்கும் இடையேயுள்ள தொடர்பு நிலையிலுள்ள உறவு. வாழ்வு சிக்கல்கள் நிறைந்தது. சூழ்நிலையின் நெருக்கடியால் பாவத்தில் விழுகிறோம். பாவமானது இறைவனை விட்டு விலகிச் செல்லும் ஒரு தவறானச் செயல். பாவம் செய்கிற ஆத்துமா சாகும். பாவத்தை விட்டு, மனம் திரும்பி நீதிக்கென்று வாழ வேண்டும். விடுதலையானது மீட்பை சார்ந்தது. இயேசு நம் உறவினராக இருந்து தம்முடைய சொந்த இரத்தத்தினால் பாவத்தி—ருந்து நம்மை விடுதலையாக்கினார். நாம் நீதிக்கு பலவீனராக இருந்தோம். நீதிமான்களாக்கி நீதி செய்யத் தூண்டுகிறார். எல்லா நீதியும் நிறைவேறும்படி இயேசு தன்னை ஒப்புக் கொடுத்தார்.

நாம் நீதி செய்யாவிட்டால் அவர் தம்முடைய பட்டயத்தை கருக்காக்குவார். இன்றைய உலகில் சமயத்திலும், அரசிய—லும் நீதி தவறி வாழுகின்ற மக்கள் ஏராளம். நீதியை ஈட்டியாக மாற்றி நீதி செய்யாமல் இருக்கிறார்கள். நீதி புரட்டப்படும் காலம் இது. கடவுள் நீதி செய்வதை விரும்புகிறார். நீதியைப் புரட்டுகின்ற மக்கள் கடவுளைத் தேடமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் பாவத்தினின்று விடுதலையாகவில்லை. கடவுளைத் தேடி அவரோடு இணைந்து வாழ்கிறவர்கள் நீதி செய்வார்கள்.

தேவனுக்கு முன்பாக மனிதனுடைய நீதி அழுக்கான கந்தை. ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, உரிமை கிடைக்காத மக்களுக்கு நாம் நீதியானவைகளை செய்ய கடமைப்பட்டுள்ளோம். இது கடவுளால் ஏற்றுக் கொள்ள கூடிய செயல். ஒருவன் நீதிக்கு அடிமையானால் பாவத்திற்கு சரீரத்தை ஒப்பு கொடாமல் இருப்பது நீதிக்குரியதாக விளங்கும். கடவுளிடத்தில் மன உறுதியுடன் வாழும் மனிதன் உண்மையாகவே பாவத்தினின்று விடுதலையாகி நீதிக்கு அடிமையாக வாழ்வான். நாமும் பாவம் களைந்து நீதிக்கு அடிமையாவோம்.

**2011**
**அக்டோபர்**
**29**
**சனி**

காலை
லூக். 22:24–27

தி. வ.
லூக். 22 : 26
**"உங்களுக்குள்ளே ... தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன்"**

மாலை
நீதி. 18:11–16

சிந்தனை
**பணிவிடைக்கு மாதிரி இயேசுவே.**



# பணிந் தடங்குதல்

கடவுளின் பிள்ளைகளை வழிநடத்த கடவுள்தாமே தலைவர்களைத் தெரிவு செய்கின்றார். இயேசு தம் சீடர்களை தெரிவு செய்து அவரோடுகூட இருக்க வேண்டினார். சீடர்களுக்குள் யார் தலைவனாய் இருப்பது என வாக்குவாதம் ஏற்பட்டது. இயேசு அவர்களைக் கண்டித்து அதிகாரம் செலுத்துகிறவர்களாய் இராதபடி தலைவனானவன் பணிவிடைக்காரனைப் போல இருக்க வேண்டும் என்றார். கடவுளுக்குக் கீழ்ப்படிந்துப் பணி செய்ய வேண்டும் எனக் கூறி நான் உங்கள் நடுவில் பணிவிடைக்காரனைப் போல் இருக்கிறேன் என்றார்.

மனிதனின் சுயநலமும், கௌரவ வாழ்வும் கொண்டு நெறிதவறி முறையற்ற நிலையில் வாழுகிறான். இறையரசின் பணிகளான வாழ்வு கொடுத்தல், நன்மைகளைச் செயல்படுத்தல், மனிதனை ஆற்றுப்படுத்தல் போன்றவைகளைச் செய்ய பணிக்கப்படுகிறான். பணிவிடைச் செய்தல் கடவுளுடைய செயல். மனிதன் தங்கள் உணர்வுகளையும், தேவைகளையும் பொறுமையுடன் வெளிக்காட்டக் கடவுளோடு போராடும் அனுபவத்தில் வளர வேண்டும். இயேசு சீடர்களின் கால்களைக் கழுவி வேறுபாடுகளைக் களைந்து பணிவிடைக்காரனைப் போல் செயல்பட்டார்.

ஆபிரகாம்—ங்கன் என்னை வணங்காதீர்கள். கடவுளே வணக்கத்திற்குரியவர் என்றார். ஆட்சி பீடத்தில் அவர் அமர்ந்தவுடனே தமக்கு ஒன்றும் உரிமையில்லையென்றும், தான் அரசாங்கத்தின் ஆட்சி நிலைத்து நிற்பதற்காக செய்ய வேண்டிய சேவைகளே என்று கூறி உழைத்து வந்தார். ஆண்டவரின் பணி அதைவிட மேலானது. அவர் அரசாங்கத்திற்கு செய்யும் சேவைகள் என்றால் நாம் இயேசுவுக்காய் பணிவிடை செய்வது அவசியமே.

இயேசுவின் பணி புதுவாழ்வுக்கும், நன்மைக்கும் அடிதளம். பணி விடைக்காரனாய் இருந்து பணிவிடை செய்தால் பிரச்சனைகளை களைந்து, வளர்ச்சி ஏற்படும், உறவு வலுப்படும். தலைவனாய் இருப்பது மேன்மை அல்ல!

# பக்தி நிலையைப் புதுப்பித்தல்

**2011**
**அக்டோபர்**
**30**
**ஞாயிறு**
**சீர்திருத்த ஞாயிறு**

காலை
யோ. 2:12–22

தி. வ.
யோ. 2 : 17
**“உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது”**

மாலை
நீதி. 18:1–10

சிந்தனை
**பக்தி நிலையைப் புதுப்பிப்போம். பரன் அருளும் வாழ்வை பெறுவோம்.**

மன்னா சேர்ப்போம்

அப்பொழுது உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்தி வைராக்கியம் என்னைப் பட்சித்தது என்று எழுதியிருக்கிறதை அவருடைய சீஷர்கள் நினைவு கூர்ந்தார்கள்.

சமய வாழ்வின் படிநிலைகளில் ஒன்று தான் பக்தி நிலை. நாம் சார்ந்து வாழும் இவ்வுலகில் நமது நம்பிக்கையினால் கிறிஸ்தவ பக்தி நிலையை புதுப்பித்து கொள்ளுதல் அவசியம். ஏதோ ஒரு நாள் மட்டும் பக்தி நிலையைப் புதுப்பித்துக் கொள்ளலாம் என்று நினைப்பது தவறு. மாறாக நாள்தோறும் பக்தி நிலையைப் புதுப்பித்து கொள்ளக்கூடிய வழிமுறைகள் உண்டு. அவற்றை தனி தியானம்,. திருமறை வாசித்தல், இறை சமூகத்தை நாடுதல், ஆராதித்தல், இறைவேண்டல் இவற்றின் மூலமாகவும் பக்தி வாழ்வைப் புதுப்பித்துக் கொள்ளலாம். இருப்பினும் இவற்றோடு நின்று போகிறது அல்ல பக்தி நிலையைப் புதுப்பித்தல். அன்றாட வாழ்வில் வாழ்வு சூழ—ல் சுத்த மனசாட்சியோடு நாம் பிறருக்குச் சேவை செய்து பிறருக்குத் தீங்கு செய்யாது, நற்பண்புகளை வெளிக்காட்டி பிறரிடம் உள்ளதை அபகரியாது, அநியாய வருமானங்களைப் பெற வகை தேடாமல், போதுமென்கிற மனதுடன் கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் என்று எண்ணுவதினால் தான் பக்திநிலை புதுப்பிக்கப்படுகிறது.

இத்தகைய புதுப்பித்த—னால் தான் உள்ளான மனுஷன் நாளுக்கு நாள் புதுப்பிக்கப்படுகிறான்.

கொர்நே—யு தேவ பக்தியுள்ளவன் என்று சான்றுரைக்கப்பட்டானென்றால் வெறுமனே சமய வாழ்வை மட்டும் நம்பி செயல்படாமல் சமூகத்திற்கு சேவை செய்து வாழும் நிலையை பெற்றிருந்தான். நாமும் நாம் கடவுளை ஆராதிப்பதால் பக்தி நிலை புதுப்பிக்கப்படாது. வாழும் சூழ—ல் வாழ்கின்ற வாழ்க்கை முறையில் தான் பக்தி நிலையை புதுப்பிக்க முடியும். ஆகவே மாசற்ற பக்திமான் என்று பிறர் நம்மைச் சான்று பகரும் வண்ணமாக கரத்தைக் கறைபடுத்தாமல், இதயத்தை மாசுபடுத்தாமல், கபடாய் ஆணையிடாமல், மாயைக்கு ஒப்புகொடாமல் வாழ நம்மை அர்ப்பணிப்போம்.

# கீழ்ப்படிதலால் புதுவாழ்வு

**2011**
**அக்டோபர்**
**31**
**திங்கள்**

காலை
மத். 4:18–22

தி. வ.
மத். 4 : 19
**"என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்"**

மாலை
நீதி. 19:20–29

சிந்தனை
**கீழ்ப்படிதலே புது வாழ்வுக்குரிய அஸ்திபாரம்.**



இயேசு செபிலோன், நப்த— நாடாகிய புறஜாதியாருடைய க—லேயாவிலே மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என பிரசங்கித்து நற்செய்திப் பணியைத் தொடங்கினார். இயேசு க—லேயா கடலோரமாய் நடந்து போகையில் மீன்பிடிக்கிறவர்களாகிய பேதுருவும், அந்திரேயாவும் கட—ல் வலைப் போட்டுக்கொண்டிருக்கிறபோது அவர்களை கண்டு என் பின்னே வாருங்கள் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்று அழைத்த வேளையில் வலைகளைவிட்டு அவருக்குப் பின்சென்றார்கள். அழைப்புக்கு கீழ்ப்படியும் சிறந்த பண்புநிலை வெளிப்படுவதை இவர்களில் காண்கிறோம்.

கீழ்ப்படிதல் என்பது, தன் முழு சுயாதீனத்தோடு இறைவனதுத் திட்டத்திற்கு முழுமையாக ஒப்படைப்பதாகும். பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும். அதுபோல கடவுளின் அழைப்புக்கு கீழ்ப்படிவதை அவர் எதிர்ப்பார்க்கிறார். அக்கீழ்ப்படிதல் புதுவாழ்வைத் தருகிறது. கிறிஸ்தவ வாழ்விற்கும் சிறப்பைத் தருகிறது.

ஆண்டவருக்கு கீழ்ப்படிகிற மனிதனுக்கு திறமைக்கு மிஞ்சிய புதுப் பொறுப்பை கொடுக்கிறார். இது அனைத்து மக்களுக்கும் முழு வாழ்வைக் கொடுக்கும் பொறுப்பாய் அமைகிறது. இந்த புது வாழ்வில் என்னோடு நடந்து வாருங்கள் நானும் உங்களோடு வருகிறேன் என்கிறார். ஒருவர் அடிப்படையில் சுயத்தை வெறுக்கின்றபோது அவர் அவரை பின்பற்றும் தகுதி பெற்ற தொண்டராக மாறி விடுகிறார். வாழ்வின் உயர்விலும், தாழ்விலும் எல்லா சூழ்நிலையிலும் கிறிஸ்துவின் பாதையில் உறுதியாக பின்பற்றுவதே சான்று வாழ்வு. அழைப்பு பெற்ற சீடர்கள் மனிதர்களை பிடிக்க இயேசுவோடு இணைந்து நின்று செயல்பட்டார்கள்.

பலர் கிறிஸ்துவிடம் வழிநடத்தப்பட்டதால் கடவுளின் திட்டம் நிறைவேற்றம் கண்டது. அதற்கு அவர்களின் கீழ்ப்படிதலேக் காரணமாக அமைந்தது. அதன்வழி புது வாழ்வு அடைந்தார்கள். இறைவன் நடத்தும் பாதை எதுவாயினும் அதற்குக் கீழ்ப்படிவோம். இறைவன் நமக்குத் தந்திருக்கும் திருப்பணியின் பாதை வழியாக மனுஷர்களை ஆதாயப்படுத்துவோம்.